786

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 AUG 1925
MADRAS

பூங்கொடியம்மன்.

பூங்கொடி மாலை.

...கசுந்தர விலாசபிரஸ்,
சிதம்பரம்.

Q25:417
N25

3
29457
771

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 AUG 1925
MADRAS

உ

திருவருட்சகாயம்.

சீர்காழி திருக்குருத்திவும்

பூங்கொடி மாலை.

இதனை

ஸ்ரீபுவனம்பிகைபட்டம்

சமரசமெய்ஞ்ஞானி

ஸ்ரீ நிர்மலானந்தசுவாமிகளாற்

திருவாய்மலரப்பட்டது

இராஜேந்திரசோழகன்

T. S. சுப்பராயபிள்ளையவர்களால்

சிதம்பரம்
சண்முகசுந்தர விலாச பிரஸில்
பதிப்பிக்கப்பட்டு
அன்பர்களுக்கு வினியோகிக்கப்பட்டது.

உ 148498
சென்னை-600 008.

பூங்கொடிமாலை

முகவுரை

ஓம் என்ற ப்ரணவத்தை வியாக்ரபாதருக்கு விளக்கிக்காட்டிய ஓமாம்புலியூரை ஸ்ரீ நிர்மலானந்த சுவாமிகளெய்தி அங்கு திருக்கோவில்கொண்டிருக்கும் பூங்கொடி அம்மனுக்கு பாமாலைபுனைந்து சூட்டினதை அன்பர்கள் கேட்டுக்கொண்டவண்ணம் சுப்பராயப்பிள்ளை அச்சிட துணிவுகொண்டது சிறந்ததே ஆகும். ஆனால் இம்மாலையில் அமைந்துள்ள விஷயங்களைப்பற்றி நான் விவரிக்காமலே இதனை கண்ணுறும் அன்பர்கள் உணர்ந்து பேரானந்தத்துள்ளாவார்களென்பதற்கு ஐயமில்லை.

ந. சுந்தரதாண்டவதீக்ஷிதர்.
சிதம்பரம்.

திருவருட் சகாயம்.

காப்பு.

சீர்மலி மாத்தி யாயர்
சிறந்தமா தவத்திற் காக
பேர்மலி ப்ரணவத் தன்மை
பேசிவோம்" ஆழுஞ் சேர
ஊர்மலி புலியூ ரோங்க
உற்ற பூங்கொடியை போற்ற
ஏர்மலி பிள்ளை யாரின்
இணையிலா கமலர் காப்பே.

சீர் விருத்தம்.

மாலை.

காப்பாக உமையாள் பாதங்
கருத்திடை கொள்வோ ரெல்லா
மூப்பாக மேலாம் வீட்டின்
முடியாகி இருப்பா ரென்று
பூப்பாக நூல்க ளெல்லாம்
புஷ்பித்து மணமு மோங்க
தோப்பாக மதங்க டோறுந்
துடரும் பூங்கொடிதான் நெஞ்சே.

2. கன்னிபூங் கொடியை போற்றில்
காலனும் அணுகா னுற்ற
சென்னியாம் வினையி னீட்டத்
தீங்கெலா நிலைநிற் காமல்
வன்னிவா யிரையாய் வாடி
மண்ணுண்டு மடிந்துப் போக
சொன்னதாய் பாலு மீய
சூழுவாள் வாழ்ந்தாய் நெஞ்சே.

3. நல்லபூங் கொடியின் பாத
நாட்டமே தவத்திற் கெல்லா
மெல்லையா யுருவே கொண்டு
எங்கணும் பரவிட் டென்ன
தில்லைமூ வாயிரத் தோர்
சிவகாமி வரமீ என்று
ஒல்லையாஞ் சபையில் நாளு
முருதிகொண் டிருந்தார் நெஞ்சே.

4. பணத்தினை தேடிக் கூட்ட
பல்வினைக் காட்டிக் கொண்டு
குணத்தினை கருத்தில் கொள் ா
குருடர்க ளாவுள் ஆகி

பிணைத்தினை மணைத்து ளாக்கும்
பிராட்டிபூங் கொடியாள் பாத
மணைத்தினை மருவிடா மற்
மாய்வது அழகோ நெஞ்சே.

5. அண்டரும் முனிவ ரெல்லா
மடுத்துபூங் கொடியி னானை
தொண்டுசெய் திருந்தா ரென்ன
தொடுத்தநா ளுளவுக் கண்டும்
பண்டுநீ செய்தே உள்ள
பவபந்தம் விட்டே ஓட
உண்டிடா தேதோ அத்தை
உள்ளவா றுரைசெய் நெஞ்சே.

6. பூங்கொடி உமையை விட்டு
பூட்டுத லெல்லாம் நானே
ஓங்கொடி வாயிற் பட்டு
உலகத்தி லுதித்தும் மீள
சாங்கொடி வழியுள் ஆக
சாதனை யறிவாய் சித்தர்
போங்கொடி சமேத அல்ல
புலம்பலே னிறஞ்சாய் நெஞ்சே.

7. வாலைபூங் கொடியாட் டன்னை
வாழ்ந்திட ஓமரம் ஊமை
சேலைபா ரைங்கிலியுஞ் சவ்வு
சிறந்தஸ்ரீங் ஸ்ரீயும் றீயு
மேமேலேயோ சிவாளன் றேதி
மின்னிடி லெல்லா மீய
நாலைபாண் டத்துள்ளே தான்
நடித்திட வைப்பாள் நெஞ்சே.

8. காட்டிய கருத்துள் ஆகி
கர்மமாம் வினையைக் கொய்து
பூட்டிய வாசத் தோடு
பூரித்து ரேசித்து கண்டங்
பூட்டிய குழலைக் கொண்டு
குருடரின் தூதற் றம்மை
வாட்டிய சவுக்கின் இன்ப
வாழ்க்கைபூங் கொடியாள் நெஞ்சே.

9. பெண்ணிவ ளாமே வேறு
பேசினோர் கருத்தும் பூத
புண்ணவை சுகமே இல்லை
புகழ்வொடு இகழ்வ தற்று
கண்ணிவளிடமே ஆகுங்
கருதுபூங் கொடியாட் டன்னை
விண்ணிவ ளிடமே உண்டு
விடையேறி உலாவு நெஞ்சே.

10. பத்துக்குள் சத்தாய் நின்று
படைத்தலு மழித்த லான
பித்துக்குள் அசைந்தே ஆடி
பேதங்கள் பலவுங் காட்டி
வித்துக்குள் அமைத்து ஓட்டும்
வீரபூங் கொடிநா மத்தை
மித்தைக்குள் ஆக்கா வண்ணம்.
மென்மேலும் பஜிநீ நெஞ்சே.

8 சீர் கலிவிருத்தம்.

11 ஆதியும் அந்தமாகி

அரனொடு அனந்தமாகி
சோதியுஞ் சுடருமாகி
சுத்தமாஞ் சொரூபமாகி
பூதியும் புவனமாகி
புலையொடு புண்யமாகி
வாதியும் வம்புமாகி
மாரும்பூங் கொடியாகும்மே.

12. ஓமிடை உரைந்ததாகி
உரைமிகு உண்மையாகி
ஆமிடை அசைவதாகி
அன்பொடு அமைந்ததாகி
ஊமிடை ஊடலாகி
உலகென உறையுமாகி
நாமிடை நாட்டமாகி
நடினபூங் கொடியாகும்மே.

13 வாணரின் வம்புமாகி
மறலியின் வலுவுமாகி
மாணரின் மயக்குமாகி
மாய்கையின் மமதையாகி
விணரின் விருதுமாகி
வினையொடு வீடுமாகி
காணரின் கருத்துமாகி
கன்னிபூங் கொடியாகும்மே.

14 பாட்டிடை பலனுமாகி
பண்ணிடை பண்டமாகி
காட்டிடை கலக்கமாகி
காற்றிடை கசனமாகி
பூட்டிடை பொரியுமாகி
புண்பல போதிந்ததாகி

எட்டிடை எழுத்துமாகி
ஏகபூங் கொடியாகும்மே.

15 ஓதலுள் ஓதலாகி
உரையினுள் உரையுமாகி
காதலுள் காதலாகி
கரியொடு கந்தனாகி
பீதியுள் பீடையாகி
பேதிக்க பெண்ணுமாகி
ஜாதியுள் சார்புமாகி
சாசபூங் கொடியாகும்மே.

16 சுற்றமுஞ் சுகமுமாகி
சூக்கும தூலமாகி
நற்றவ நண்பராகி
நடைமிகு நாரியாகி
பற்றற பறையுமாகி
பரிதியிற் பளிங்குமாகி
கொற்றவர் குடியுமாகி
குமரிபூங் கொடியாகும்மே.

17 அட்டமா ஆட்டுமாகி
அலகைகள் அறிவுமாகி
கட்டமா காளையாகி
கருணையங் கடலுமாகி
மட்டமா வாசியாகி
மதிஇடை மஞ்சையாகி
விட்டமா வினையுமாகி
வேதபூங் கொடியாகும்மே.

18 சட்டமும் சமபமாகி
சாதிக்க சமர்த்துமாகி

பட்டமும் பாலராகி
பரிபாஷை பலவுமாகி
கட்டமுங் கவலையாகி
கடவுள கணங்களாகி
வட்டமும் வதனமாகி
வாமிபூங் கொடியாகும்மே.

19 பெண்டிரும் பிள்ளையாகி
சேசுநால் பேரியாகி
உண்ணீரும் உடலுமாகி
ஊழத்தைக்கு உறுதியாகி
கண்ணீரும் கர்மமாகி
கரையிலா கடலுமாகி
விண்டிரும் வில்லுமாகி
வெற்றிபூங் கொடியாகும்மே.

20 எட்டொடு இரண்டுமாகி
எத்தப்பாட் டெல்லாமாகி
பட்டோடு பணியுமாகி
பாவைநா பசப்புமாகி
துட்டொடு சுழல்வதாகி
சூட்சுமத்தின் சூட்சுமமாகி
சூட்டொடு கூத்துமாகி
கூவும்பூங் கொடியாகும்மே.

7 சீர் விருத்தம்.

21 சிந்தையை யொடிக்கிட சிறிதேனுங் கல்லாமற்
சினமெனும் நாயை யேவி
வந்தவர் துயருற சூதுபல செய்கின்ற
வம்பரின் அரச னாகி

அந்தமாய் உள்ளதின் பதபூசைசற்றேனும்
அன்பொடு செய்வ தற்று
புந்தியை வளர்ப்பதே பெரிதாக எண்ணினேன்
பூங்கொடி. காரு முமையே.

22 மந்திரமொடு பலஜால தந்திரங்கெய திரம்வேண்டி
மனதைப்பா ழாக்கி நித்தம்
சுந்திரமிகு மடவார்க ளுரவினை விட வேறு
சுகமில்லை என்று எண்ணி
பந்துபடு பாடெலாம் பட்டுஉடல் வலுவற
பயந்தோணு துண்ணி நோக்கில்
பொந்துசந் துள்ளதெது முதவாது தூதரிடம்
பூங்கொடி காரு முமையே.

23 வேதமொடு நூல்பல ஓதிடவுந் திடமில்லை
வினைசெய்ய கற்க வில்லை
சாதமொடு காய்கனி உண்டுருசி கண்டவை
சற்றுநா நிற்க வில்லை
வாதமொடு புலைகளவு கொலைகாம மதுவற்று
வாழமனம் இசைய வில்லை
பூதமொடு மற்றுள புதுமகளை கட்டிநான்
பூங்கொடி. காரு முமையே.

24 சற்றேனும் ஒருவர்க்கு உபகாரஞ் செய்யாமற்
சதிகள் பலவும் புரிந்து
கற்றிட்ட யமதையால் கண்கொழுப் பேரியுன்
கமலவடி பூசை விட்டு
சுற்றமொடு மனைமுதற் சகமாகு மென்றுண்ணி
சுடலைநடு வான என்னை
புற்றிலுரு மரவாக்கி புவனபோ கங்கலற
பூங்கொடி காரு முமையே.

25 பெற்றவர்கள் மனஞ்சோர பெண்டீருமக்களும்
பேதைபோ லிரந்து உண்ண
உற்றவர்கள் உரைசெய்ய வழிபட்டுங் கேளாமல்
உள்ளபொரு ளழியு மட்டும்
கொற்றவர்கள் அஞ்சுமால் விலைமாதர் வலைபட்டு
கூத்தாடி பிணியு முற்ற
புற்றிலுருஞ் செதலாகி பீடையால் வாடுறேன்
பூங்கொடி காரு முமையே.

26 கைப்பொரு டனைநம்பி கான்வேட ருருளய்து
கருணைசிறி தில்லாமலே
இப்புவி போகத்துள் ஈஆக உருமாறி
இயம்பொணு தீ திசைத்து
அப்பொடு உப்பிற்கு உள்ளதை ஆயாமல்
அல்லலுள் ஆள என்னை
பூப்பிற்கு மூலமாய் தோன்றுமற் றோன்றுகிற
பூங்கொடி காரு முமையே.

27 தஞ்சமென் றோர்களை தடிகொண் டடித்தோட்டி
சமர்த்துகள் வேண மட்டும்
வஞ்சமின் ஞர்மெச்ச பேசிடவுங் கற்றுள
வம்பனும் வாசி என்ற
சஞ்சலம் போக்கிரா ளுயர்ஞான மீயவல
சரசமா புரவி ளறி
கொஞ்சிநாள் விளையாட வரமீந்து களியுற
பூங்கொடி காரு முமையே.

28 பட்டங்கள் பலவிலும் பாவைமா ருறவிலும்
பணமிக வருத்த லானுங்
கட்டங்கள் தோணு கால்து துவரிடம்
கலக்கங்கள் விட்டி டாது

இட்டங்கள் நிலையாது நெடுமொழி செல்லாது
இருளரை யர்கு மெல்லாம்
புட்டங்கள் ஆட்டினும் விடுவரோ கொடுபோவர்
பூங்கொடி காரு முமையே.

29 முடிமன்ன ராஜனும் முத்தமிழ் உணரினும்
முக்கினை விட்டு வேறு
படிமணங் காட்டாது பரியாச மல்லவிது
பணத்திறகு கிட்டி டாது
பிடிமறை சொன்னபடி சாம்பலாய் போகுமுன்
பீதியற கால மெல்லாங்
கொடிமரம் நாட்டிட நின்கருணை மிகவேண்டும்
பூங்கொடி காரு முமையே.

30 முக்கோண வட்டத்துள் ஓங்கார தொனிகாட்டி
மூச்சுவிட் டாடு முன்னை
அக்கோண இடைபுக்கி வழிபட்டு வாழ்ந்திட
அன்பன் முன் வருக வேண்டும்
கைக்கோண மிககற்ற மெல்லிமார் உறவகல
கன்னிநீ செய்து யெல்லா
பைக்கோண பயமேக பாலனும் வாழ்ந்திட
பூங்கொடி காரு முமையே.

6 சீர் விருத்தம்.

31 முத்தியை யீய வல்ல
முக்கண்ணி உயிர்க டோரும்
பத்தியை விளக்கிக் காட்டும்
பார்வதி சிவனார் மெச்ச
சத்தியை விரியக் கூட்டி
சலிப்பற அம்ப லத்தில்

சித்தியை பதிய வைத்த
சிறுமிபூங்கொடியை வாழ்த்தே.

32 அத்தியை முருகன் றன்னை
அளித்தமா கன்னி வேத
சுத்தியை பரவச் செய்த
சுந்திரமா வல்லி ஞாலம்
வெத்தியை அடைய வேண்டி
விரைந்துஆ டாடிட்ட பாத
கத்தியை அன்ப ருள்ளங்
கருதுபூங் கொடியை வாழ்த்தே.

33 மூவரும் அஞ்ச வேளை
முடிசாய செய்தக் கண்ணி
தேவரும் கரத்தை கூப்ப
திரிபுர மெரித்த நீலி
நாவரும் வசன மாக
நடமாடு கின்ற வல்லி
பூவரும் தோற்ற மேற்றி
புகழுபூங்கொடியை வாழ்த்தே.

34 அன்னையுந் தந்தை யாகி
அறிவெனும் பதமு மாகி
பின்னையுங் குரவ னாகி
பீடைக ளொழித்த தாகி
என்னையுந் தடுத்த எகி
எங்கணும் நிறைந்த போகி
சென்னியுங் கண்ணை காட்டி
சிறந்தபூங் கொடியை வாழ்த்தே.

35 நித்திய மல்ல ஏதும்
நிலைத்திட மாட்டா தென்ன
சத்திய மாகச் செப்பி
சந்தத முனையைப் பற்றி
வத்தியை கொழுத்திக் காட்டி
வல்வினை முற்றுங் கொய்து
புத்தியை திடப்படுத்தும்
புருஷபூங் கொடியை வாழ்த்தே.

36 காரியம் பலவு மாகி
கடங்களை ஆட்டி வைக்க
நாரியுஞ் சிவனு மாகி
நான்முகன் மாலுந் தேவர்
வீரியஞ் செலுத்த மிக்க
விஞ்ஞதத்தை அளிக்க வல்ல
பாரியாய் சமைந் திருக்கும்
பாவைபூங் கொடியை வாழ்த்தே.

37 முழுமுதற் செல்வி ஆகி
முத்தொழின் முதல்வி ஆகி
விழிமுதற் புலன்க ளாகி
வினையெனுங் கருவு மாகி
வழிமுகன் மறைக ளாகி
வாதபே தங்க ளாகி
பழிமுதற் கெட்டா தாகி
படருபூங் கொடியை வாழ்த்தே.

38 மித்தைக்கு மூல மாகி
மின்னலின் ஒளியு மாகி
வித்தைக்கு விருப்ப தாகி

விரியமுக் குணமு மாகி
பத்துக்கு ளடக்க மாகி
பற்றிலா முடிவு மாகி
புத்திக்கு மீச ஞகி
பூர்க்குபூங் கொடியை வாழ்த்தே

39 இருப்த்து எ ழுடுக்கள்
ஈரா று ராசி யோடு
வருபற் று கோளா யுள்ள
வலுமிரு ஒன்ப தென்ன
ஒருமித்து இக பரத்தை
உடலுள் ஆக்கி வாட்டி
புருவத்தி னிடையே ஆடுங்
புண்ணியபூங் கொடியை வாழ்த்தே.

40 ஆட்டெல்லாம் நந்திக் குள்ளோ
அப்பப்பா மெத்த உண்டு
கூட்டெல்லாம் உச்சிக் கீழாய்
கூடிட்டு அதனைக் காண
பாட்டெல்லாம் பாடிட் டென்று
பரிந்துநா வடக்கி சுத்த
பூட்டெல்லாம காட்டி வைக்க
புனிதபூங் கொடியை வாழ்த்தே.

41 பண்டித திறமை வேண்டாம்
பாராள நினைக்க வேண்டாம்
கண்டினு மினிமை யான
கன்னிய ருறவு வேண்டாம்
சண்டனை ரனுகா வண்ணம்
தசமுனை தொடர ஞான

குண்டலி தாள் திறக்க
கூவுபூங் கொடியை நாளே.

42 துப்பிலா வைந்து பேர்க
ளுறவினை விட் டொழித்து
கப்பிய பசியை ஏற்று
கண்ணினை கொளிக் கொண்டு
அப்பியே தனிப்ப தற்கு
ஆதிக்கு மூல மென்று.
கொட்பினை தட்டி வாழ்த்தி
கூவுபூங் கொடியை நாளே.

43 திட்டமாய் ஆறு வீட்டில்
தீபத்தை யேற்றி வைத்து
சட்டமாய் மண்ட லங்கள்
சமைத்துடன் தாண்டி மெள்ள
வட்டமாய் உள்ள வீட்டில்
வாசலுங் கடக்கக் காணும்
மட்டமாம் மேடை மேவ
வாழ்துபூங் கொடியை நாளே.

44 கள்ளோடு கஞ்சா நிக்கங்
கருத்திடை மாட்டி வைக்க
துள்ளியே சத்தி ஈட்டந்
தொடந்துற வாடுப் சுப்பில்
உள்ளியின் காதை யாரும்
உதைத்ததை மெள்ள ஓட்டி
கள்ளியை விட்டி டாமற்
கருதுபூங் கொடியை நாளே.

சென்னை-600 008.

45 தீங்கனி தன்னிர் மிக்க
சிறந்துள கனிகட் கெல்லாம்
மாங்கனி ரசமா னானை
மனோன்மணி என்று மூவர்
தேங்கனி இவளா மென்று
சிந்தித்து வசமே கொண்ட
பூங்கனி அமுத முண்ணை
புகழுபூங் கொடியை நாளே.

46 நம்பினோன் தன்னைக் காக்க
நரிபரி ஆகச் செய்து
வெம்பினோன் துயரைத் தீர்த்து
விருதுகட் டாட்ட பாண்டி
கொம்பினோன் கண்டு நாண
கூத்தாட வைத்த செல்வி
அம்பினோன் நீதா னென்ன
ஆட்டுபூங் கொடியை நாளே.

47 பாவினை சம்பந் தர்க்கும்
படுக்கையை சுந்த ரர்க்கும்
வேலினை அப்ப ருக்கும்
விரிவாக காட்டி மெள்ள
நாவினை அடக்கும் போக்கு
நவின்றதை முழுதும் ஆப
காவினை விடாது காக்க
கருதுபூங் கொடியை நாளே.

48 பொன்னொடு மண்ணும் பெண்ணும்
புலையாகும் அதனைத் தள்ளி

மன்னிட காதல் கொண்ட
மாபூத மைந்தைக் கூட்டி
பின்னிட அடுத்து நிற்கும்
பேதைமா கரி உரித்து
தன்னிட சலன மேக
தாங்குபூங் கொடியை நாளே.

49 வாக்கினை வசப்ப டுத்தி
வாப்புக்கு ள்ளாக்கி மெள்ள
மூக்கினை பற்றிச் செல்லும்
மூவேழு அறநா டன்னை
தேக்கிட தீட்சை கொண்டு
சிந்திக்க தப்பிப் போகா
போக்கினை திடப் படுத்த
பூட்டுபூங் கொடியை நாளே.

50 சத்தியம் வாலை யாகும்
சதுர்மறை முடிவீ தாகும்
சுற்றமாய் மற்ற தெல்லாம்
சூட்டின விரா மாகுங்
நற்றவம் திடமே ஆகும்
நாநாசி மூல மாகும்
பத்தியம் கற்றுக் கொள்ள
பாடுபூங் கொடியை நாளே.

51 ஆட்டிவைக்கும் பேர்க்கெல்லா மாதிமாதி
அண்டிரேற் றமைகார்க்குந் தேசிதேசி
ஊட்டிவைக்கும் பேர்க்கெல்லா மேட்டி மேட்டி
ஊதுசங்கை கைகொண்ட வீரிவீரி
காட்டிவைக்கும் பேர்க்கெல்லா வாதிவாதி

காலாதி காலமெல்லாங் கடந்தசோதி
பூட்டிவைக்கும் சமர்த்துள்ள கொடியளேலி
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.
52 நாட்டிவைத்த எழுத்தெல்லா மீதேயாகும்
நாதாந்த முடிவாடுக் தேவித்தேவி
மாட்டிவைத்த காமாக்ஷி மதுரையாக்ஷி
மணமிகுந்த விசாலாக்ஷி துர்கைகாளி
நீட்டிவைத்த சாமுண்டி வாராகிமாரி
நிலையான அகிலாண்ட முதலாயுள்ள
போட்டிவைத்த நாமமெலா மானவன்னை
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.
53 காலமெலாங் கடலநகர் மன்னராலே
காதலொடு பூசைசெய்ய அகங்களித்து
சீலமிகும் ஓமாம் புலியைப்பற்றி
சிறப்போடு வாழ்கின்ற தேவத்தேவி
கோலமெலாங் காட்டிவைக்க பாலையத்தில்
கோன்திகைக்க விளக்கெண்ணை தருகளென்று
புவனத்தை மயக்கிவைக்க ஞானந்த
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.
54 வாரணத்தி பெயரோங்க புவனமெல்லாம்
வாழ்த்துகின்ற சின்மயத்தி மறைகளேற்றுங்
காரணத்தி கடிமனத்தி காலக்காலன்
காதல்கொள மணமிகுந்த ரூபாரூபி
[illegible] கதி படைப்பழிய செய்யவல்ல
[illegible]த்தி கலியகல பத்தருள்ள
பூரணத்தி புதுமையெலாந் திரண்டிருக்கும்
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

55 ஓங்காரங் காட்டுகிற ஆதியான
உத்தமத்தி உலகமென்ற நாமமோங்க
ஆங்காரத் துள்ளாடும் வல்லசத்தி
அம்பலத்தின் படியான கோலமூர்த்தி
ஊங்கார தொனிகாட்டு மூலக்கண்ணி
ஊடலென இகபரத்தை வாட்டவல்ல
போங்கால மொடுக்கத்தி மூவர் வாழ்த்தும்
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

56 கருவாக சராசரத்தை கொண்டகன்னி
காதலொடு சங்கரரை தழுவும்பொன்னி
தருவாக வேல்வரை செய்து வேடர்
சமர்த்தழிய போர்கூட்டி வைத்ததேவி
மருவாக அணங்கனகை வாளியாகி
மாதவத்தை விட்டுசிவ னகலச்செய்த
புருவான வில்லி னிடை ஆடும்பாத
பூங்கொடியை பூசித்தோர் பெரியோரர்மே.

57 வட்டமதி நின்றுவரும் அமுதமான
வாலைமெனுஞ் சிருபெண்ணாங் கமலபீட
இட்டமதி லமர்ந்தவளை கண்ணைமூடி
இடையான புருவமையம்பார்க்க ப்பார்க்க
கட்டமதி லுள்ளவைக ளகன்றுஏக
காமநீர் விழிபற்றி சோரச்சோர
பொட்டுமதி லாய்கணச் சுடருமான
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

58 மாரிநா ளோடுகின்ற காற்றைப்பற்றி
மாசில்லா ஒங்காரத் திடைநிருத்தி
சீரிநா கொண்டுவின் வழியையமூடி

சிந்தையற ரேசித்து கும்பத்துற்று
வாரிநா டோரமுதை உண்ணத்தேகம்
வலுவாகும் பிணிமூப்பு சாக்காடேகும்
போரிநா ளாவதொன்று மில்லையென்று
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

59 சாட்டையிலா பொம்பரத்தை ஆட்டிமெள்ள
சாகாமற் சாவதற்கு இடமுங்கொண்டு
பாட்டையிலா ஊருக்குள் குடிசைகாட்டி
பந்துஎன்ற ஈராறு எட்டுப்பேரை
கூட்டமிலா காவலுக்கு ளாக்கிவைத்து
குரங்கென்ற மனச்சலனம் முற்றும்மாற்றி
போட்டியிலா உத்யோகஞ் செய்வதற்கு
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

60 பத்தியுடன் நவகோணந் தன்னைகீறி
பண்பான அட்க்ஷரங்க டமை அமைத்து
சத்தியுடன் சிவன்சேர பிடித்துக்கட்டி
சாற்றிவைத்த மந்திரத்தை நித்தமோதி
மித்தையுடன் உண்மையினை தெளியக்கண்டு
மெலியாமல் மேடைமே லிருப்பதற்கு
புத்தியுடன் முக்காலும் மூலங்கார்த்து
பூங்கொடியை பூசித்தோர் பெரியோராமே.

7. சீர் விருத்தம்.

61 காவலன் கடலங் குடிவளர் மன்னன்
கவலையை தீர்த்திட்ட மாது
கோவலன் காதை மெய்யென உணர
கேடிலா உடையார் சேனை
கோவலன் மயங்க ஓராம் புலியூர்

23

குடியெனக் கூறிய செல்வி
பூவலன் புகழ பூங்கொடி ஆக
பூர்துள மங்கையை தேடே
62 நாவலர் இறைஞ்ச வேண்டிய வரத்தை
நாடோறு மீந்திடும் வல்லி
சேவலர் கையில் வேலாய் நிற்கும்
திரமிகு அறிவினை உடைய
மாவலர் அஞ்ச சிங்கத்தி லூரும்
மாதங்கி குறைகளை தீர்க்க
பூவலர் போற்ற பூங்கொடி ஆக
பூர்துள மங்கையை தேடே.
63 பாண்டிய நாட்டிற் சுந்திரற் றமக்கு
பாரியாய் அமர்ந்த மீனாட்சி
வேண்டிய புதுமை மதுரையிற் காட்டும்
வெற்றிசே ரற்புதக் கன்னி
தாண்டியி லடைந்த மச்சத்தை போல
தாக்கிக்கும் பேர்களின் துயரை
பூண்டவ; ளென் றும் பூங்கொடி என்ன
பூர்த்துள மங்கையை தேடே.
64 சாத்திர உண்மை இஃதெனக் காணு
சமர்த்தினை யுடையவர் சுற்று
சேத்திர மையம் நடுநிலை பற்றி
நீங்கொணு சாகரந் தன்னை
மூத்திரக் குழியாய் மதித்ததை யொழிக்க
முக்காறு மெண்ணிய பேதை
புத்திர மறிய பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கையை தேடே.

65 அருமையாய் தன்னை பாடிட அறியர்
அசடர்க ளுறவினை நீக்கி
பெருமையாய்ப் பணத்தைக் காத்துநா ளிருக்கும்
பேய்க்குணம் முற்றிலும் மாற்
வருமையாய் இருக்கா வரமீந்து பத்தர்
மலரடி வருடவே வைத்து
யொருமையாய் காக்க பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கைய தேடே.
66 நித்தமும் கோவில் வாயிலைப் பற்றி
நீங்கா தமர்ந்திட மனதை
பித்தமேகொள்ள பிராடியே செய்து
பிழைகளை சிந்தைகொள் ளாமல்
சித்தமே களிக்க சிங்கத்தி லூர்ந்து
திரையெலா மகற்றிட எய்தும்
புத்தகமொத்த பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கையை தேடே.
67 வாட்டிட நாளும் வந்திடுந் தூதர்
மகிழ்ந்திட கர்மத்தை செய்து
கோட்டிடை யாகிக் குரங்கெனத் தவிக்க
குணத்தினை நாளுமே பெருக்கி
நோட்டுடன் நோட்டை பெட்டியில் வைத்து
நொந்தவர் தம்மையும் விரட்டும்
பூட்டகற் றமக்கும் பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கையை தேடே.
68 நல்லவ ரென்ன நாடயே கூடும்
நாரியின் குணத்தினைக் கெடுத்து
தொல்லுல கதனை திரமென எண்ணி

சூதுடன் வாதினை புரிந்து
பல்லற மியற்றும் பாக்கிய முதிர்ந்த
பசப்புக ளுரைத்திட அஞ்சா
புல்லருங் காண பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கையை தேடே.
69 மாதினர் தம்மை மயக்கியே பொருளை
மறைத்திட உளத்தினி லெண்ணி
கோதினர் றமக்கு உதவிகள் செய்ய
கூடியே வருகிற பொல்லா
வாதினற் ருமுட் மங்களம் பருக
வல்வினை ஒட்டியே காக்க
பூதலந்தன்னில் பூங்கொடி ஆக
பூர்துள மங்கையை தேடே.
70 மாத்திலுள் மாத்தாய் மருவியே இருக்கும்
மலரடி உளத்தினிற் றேக்கி
சோத்தினை உண்டும் சோம்பியே திரியும்
சூதர்க ளுறவினை விலக்கி
காத்தினுள் காத்தாய் கருத்தினை நாளுங்
ககனத்தை பற்றிகா விருக்க
போத்திலுள் போத பூங்கொடி ஆக
பூர்த்துள மங்கையே தேடே.

6-சீர் விருத்தம்.

71 பூசிக்க வகையில் லாத
புல்லனு முன்னை நித்தங்
தூசிக்க சற்றப் பேர்க
ளுறவினை சதமாய் நப்பி
வாசிக்க லானேன் பொல்லர்

வம்பனைத் தடுத்து ஆண்டு
போசிக்க வேண்டு மம்மா
பூங்கொடி தேவத் தேவி
72 நாரணி மனம் பொருத்து
நாயினை ஆள வேண்டும்
காரணி கையை விட்டால்
காலனும் விடுவ தில்லை
வாரணி ஞால மேற்றும்
மங்கள கல்யாண ரூபி
பூரணி வருக வேண்டும்
பூங்கொடி தேவ த் தேவி
73 எண்டிசை உன்னை யன்றி
எதனையுஞ் செய்ய லாகா
வண்டிசை தன்னிற் மிக்க
வாமிநின் கமலப் பாத
தொண்சை கூட்ட நெஞ்சை
குறிகிட செய்ய வேண்டும்
பெண்டிசை போக்கு மம்மா
பூங்கொடி தேவத் தேவி
74 சுத்தமெஞ் ஞான கோல
சுகமுனி வாழ்வே பொல்லா
கத்தையுன் திருவ டிக்கு
கருத்தினை பலி கொடுத்து
மித்தையை போக்க வாயல்
மின்னினே னென்னைக் காரும்
புத்தகத் துரையே வேத
பூங்கொடி தேவத் தேவி

75 பட்டது போதும் போதும்
பாவியேன் முறையைக் கேட்டு
தொட்டது விலகி டாமல்
துடர்ந்திட வார்த்தை யீய
விட்டது ஆன உன்றன்
விலைமிகு கமலப் பூசை
புட்டியை யளிக்க வேண்டும்
பூங்கொடி தேவத் தேவி

76 வேம்பினைக் கரும்பா யுண்ட
வேடனின் விஷத்தைப் போக்கி
பாம்பினை காத்த வல்லி
பாலனை காப்ப தற்கு
சோம்பினை யாது கண்டு
துய்யமா தவமே அம்மா
போம்பிழை உனை நினைக்க
பூங்கொடி தேவத் தேவி

77 அறத்தினை செய்வ தற்கு
அம்மைபொன் இல்லை இல்லை
கரத்தினை காட்டி பிச்சை
கருதநெஞ் சிசைய வில்லை
சிரத்தினை சாய்து வாழ
சிவகாமி கற்க வில்லை
புரத்தினை எரித்த மாதே
பூங்கொடி தேவத் தேவி

78 நாதமே அமர ரேற்றும்
நாயகி உன்னை அன்றி
வேதமே இல்லை என்ற
விருத்தினை மனதி லூன்றி
பூதமே நடு நடுங்க
புலன்களை வசப் படுத்தும்
போதமே ஈய வல்ல
பூங்கொடி தேவத் தேவி.

79 மாதமும் வருட மாகி
மாசிலா யுகமு மாகி
பேதமும் அனந்த மாகி
பேசுநா ரெல்லா மாகி
வாதமே மலிந்த தாகி
வாக்கினுக் கெட்டா தாகி
பூதமே அற் றிருக்கும்
பூங்கொடி தேவத் தேவி

80 கர்பக வல்லி நீலி
காலனை ருண்ணும் மூலி
துர்பல மெல்லாம் போக்கி
துஞ்சாத வரத்தை யீந்து
சிற்பர ஒளிவைக் காட்டி
சித்தர்க ளுறவு ஓங்க
பொற்பத மளிக்க வேண்டும்
பூங்கொடி தேவத் தேவி.

81 சாங்கிய வழியைப் பற்றி
சாதனைக் குள்ளா னாலும்
ஓங்கிய சிவத்தைக் காண
ஊடெலா மோடி னாலும்
தாங்கிய மாய்கை சூழ
தையலை பற்றி னாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ

82 வாங்கிய கட னீயாது
வம்பினைப் பேசி னாலும்
பாங்கிய ருறவை நம்பி
பல்வினை காட்டி னாலும்
தூங்கிய குணம் படைத்து
தூய்மையை விடலா னாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ

83 அங்கத்தி னுருக்கள் கெட்டு
அல்லலுள் ஆகி னாலும்
தங்கத்தி லதிக மான
சரீரத்தை கொண்டிட் டாலும்
வங்கத்தை உருக்கி உண் ணும்
வலுவினை பெற்றிட் டாலும்
பூங்கொடி மாதா தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ

84 எங்கனும் மதிக்க வல்ல
இதிகாச உரையைப் பேசி
சங்கைக ளுள்ள வற்றை
சாற்றிட வலுக்கொண் டாலும்
நங்கையை பாகம் வைத்த
நக்கரி னுறவெய் தாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமே

85 தூங்காம லுறங்கும் வித்தை
சூதற ஓதி னாலும்
ஆங்கரந் தனை விடுத்து
அசைவற இருந்திட் டாலும்
போங்கால முணர வல்ல
போகத்திற் சிறந்திட் டாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

86 அங்கென ஆறி லாதி
அயத்தினை வென்றிட் டாலும்
இங்கென ஓமஞ் செய்ய
சிரகண்ட மிருத்தி னாலும்
நங்கென சமாதி கூடி
நாட்டிய மாடி னாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

87 பங்குனி தன்னிற் பூமி
பாசத்தை வாரி னாலும்

திங்களை யொத்த செம்பை
சிறிப்பொன் ஞக்கி ஞலும்
மங்கிடச் செய்யும் ரோயை
மாற்றுமூ தறிவி ஞலும்
பூங்கொடி. பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

88 ஓம்நம சிவாய மென்ன
வைடாட கற்றிட் டாலும்
நாமநம சிவாய மென்று
நடனமே புரிந்திட் டாலும்
போம்நம பீதி என்று
புரமெலாஞ் சாற்றி ஞலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

89 சங்கொடு சக்கர மேந்தி
தாண்டவ மாடி ஞலும்
சங்கர நாமம் பூண்டு
சாம்பலைப் பூசி ஞலும்
மங்கள வாத்தை யீயும்
மாமறை செக்சா ஞலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

90 சங்கைக ளேக வைக்கும்
சமயத்தை பற்றி ஞலும்
பங்கமே செய்ய வல்ல
பாஷாண முண்டிட் டாலும்
எங்களு மீசன் தன்னை
இடையற கண்டிட் டாலும்
பூங்கொடி பாதந் தன்னை
பூசிக்கா திருக்கப் போமோ.

91 வாதாடும் பூதம் வாட்ட
வாலைபூங் கொடியே கூடி
சூதாடும் தோகை யாகி
துலைத்திட நினைத்திட் டாலும்
காதோடுக் கையைக் காலை
கத்தரித் திடினு முன்னை
ஓதாது இருப்ப தில்லை

உறுதியீ தறிகு வாயே.
92 வம்பனே போடா என்று
வாலைபூங் கொடியே தூரி
அம்பினை எவி தூல
மனத்தையும் துளைத்திட் டாலும்
கொம்பனை யாளே உன்னை
கும்பிட்ட கரத்தார் வேறு
கொம்பினைப்பணிவ தில்லை
குழந்தையை மறந்தி டாதே.
93 அடாதவ னென்று என்னை
அன்னை பூங்கொடியே வாழி
தொடாதவள் வயிற்றி லாக்கி
துயரத்துள் ஆகி னாலும்
விடாதவ னிவனு மென்ற
விருதினை உனக்குக் காட்ட
படாதவை வருணி மஞ்சா
பாலனை விட்டி டாதே.
94 கட்டியே சாக்கி விட்டு
கடத்தபூங் கொடியே துப்பி
பட்டியே போடா என்று
பதைத்திட உதைத்திட் டாலும்
நெட்டியே கழுத்தைப் பற்றி
நீண்குழி தள்ளி னாலும்
ஒட்டியே இருக்கு நெஞ்சத்
துரிவிட் டகன்றி டாதே
95 செக்கினி விட்டு என்னை
சிதையபூங் கொடியே ஆட்ட
தக்கவ ரிடத்தி லீந்து
சதிசெய்ய நினைத்திட் டாலும்
சொக்கினே னுணரு யாத
சுதந்திரம் பெருவ தற்கு
தக்கவை யெல்லா மீய
சாம்பவி வருதல் நன்றே.
96 என்னுடன் தீதைக் காணு
நாயைபூங் கொடியே பொல்லா
மன்றினுள் தீயி லாக்கி

மங்கிடச்செய்திட்டாலும்
வென்றிடப் போமோ கொண்ட
வெறிஎனை விட்டி டாது
குன்றமர் முனியை காத்த
குமரிவந் தாளு வாயே,

97 காரண மாக உள்ள
கன்னிபூங் கொடியே எங்கும்
பூரண முன்னை யன்றி
புகலநா எழுமோ சற்றும்
வா ரண செயலா யாத
வாழ்கையோ ருரையை நம்பி
நாரணி புலம்பு கின்ற
நாயினை தடுத்துக் காரே.

98 ஏமாற்ற நினைத்தி டாதே
ஏகபூங் கொடியே என்னை
பூமாற்ற மனதி லெண்ணி
புலம்பிட் செய்தி டாமற்
நாமாற்ற வழியைக் காட்டி
நாபன்றி யானை தன்னை
ஓமாற்றி லழுத்து தற்கு
உண்மையை செப்பு நாளே.

99 அச்சங்க ளணுகி டாத
அம்மைபூங் கொடியே உன்றன்
பச்சங்க ளெல்லா மான
பதமலர் சேவை நாளுஞ்
சொச்சங்க ளான வைய
சொக்கினை போக்கு மென்று
எச்சங்க ளான நூலின்
இச்சையை விவரிப் பாயே.

100 சண்ட னு மனுகா முன்னம்
தையல்பூங் கொடியே வேத
பண்டுமா மறைகள் வாழ்த்தும்
பாண்டியன் மகளே நெஞ்சில்
கொண்டவை முழுதும் நீக்கி
குழந்தைக்கு அமுதை ஊட்ட
செண்டென சிங்க ஊர்ந்து

பூங்கொடி மாலை

சேவையை தாருந் தாயே.

7 சீர் விருத்தம்.

பலகலை போற்றுங் பூங்கொடி மலரை
பற்றற பற்றிய நேயர்
அலைகட லென்னும் அணங்கனல் வாடி
அலைவது மில்லை இப் புவியில்
முலைகட லென்ற மங்கைமார் நாணி
முடிபுகி பற்றிடும் பணிய
சிலைகலை வாழ்த்துந் தெய்வமா யிட்ட
சிதரினா ளோடிடும் போற்றே.

102 மலைமக ளென்ற மாதுபூங் கொடியை
மனத்திடை இருத்திடிற் றேவர்
விலைமக ளென்ன கொண்டுள கருத்தை
விட்டிட துணிகுவர் காக்க
இலைமக ளெங்கும் ஈன்றுகை பற்ற
இறுதியா மிம்மொழி வேத
குலமக ளாவு குன்றுமல் ஓங்கும்
கூசாமல் பணிவுடன் போற்றே.

103 அண்டர்க ளென்னும் அமுதபூங் கொடியை
அண்டிடில் குறைவுனக் கில்லை
தொண்டர்க ளுறவுங் கூடிடும் மெள்ள
தூய்மையாய் உள்ளவை கிட்டுங்
கண்டகர் மங்கள் புரிவதும் ஒழியும்
கனகமாய் உள்ளமுந் தெளியு
விண்டகர் மத்தை இடையறு வண்ணம்
விருதென பற்றிடப் போற்றே.

104 பத்தினி ஆன பூங்கொடி யாளை
பணிவது சுலபமோ மெத்த
சித்தினி இவளை விடவேறு இல்லை
சிவனஞ்சி வரமே ஈய
முத்திநீ என்று முடிவினை காட்டி
மூலத்துள் ஆடிட ஞான
சத்திநீ என்ன சங்கரன் வாழ்த்த
சமரசம் அளித்தனன் போற்றே.

105 போற்றுதற் கரிய பூங்கொடியாளை
பூசித்தார் நவகோடி சித்தர்

148498

ஏற்றுதற் கரிய இகபர சுகத்தை
என்றென் றுங் குறைவுறு தேற்று
காற்றுடன் கலந்து கடுவெளி மேவி
காதலற் றுலகெனுங் நாமம்
சேற்றுடன் மணக்க நீட்டினர் நூலை
சிறப்புடன் கவனித்து போற்றே.

வெண்பா.

106 ஓமாம் புலியூரில் உரைந்துதவஞ் செய்வதற்கு
ஏமாந்து போகாதிருக்கில்—போமாம்
வல்லவினை உள்ளவைகள் வாழ்த்திடுவார் அமரரெல்
நல்லவினை கைக்கூடும் நாடு. [லாம்.

107 நட்டங்க ளில்லை டாடுபூங் கொடியாளை
இட்டங்கள் கூடுமென் றும்—சட்டங்க
ளுள்ளவைக ளெல்லாம் முருக்கொள்ள அண்டிவர
கள்ளமேலா மற்றுவிடுங் கார்.

108 வாழிஐங்கரன் அறுமுகன் வாழியே
வாழிசங்கரன் மாலயன் வாழியே
வாழிசித்தர்கள் குருமுனி வாழியே
வாழிபூங் கொடி மலர்பதம் வாழியே.

ஓம் தத் ஸத்.

நிர்மலானந்தசங்க விளம்பரம்.

இச்சங்கத்துக்கு மெம்பராகச் சேருவோருக்கு சிவராமசேகரம் என்னும் புத்தகமும், சாற்றுக்கவியுடன் கூடிய பூங்கொடிமாலையும் இனாமாக அனுப்பப் படும் மற்றவர்களுக்கு 1–0–0. வீதம் வி பி மூலமாய் அனுப்பப்படும்.

காரியதரிசி'